# சார்க்மாநாட்டை குழப்ப இந்தியாமீண்டும் முயற்சி?

(கொழும்பு)
கொழும்பில் மீண்டும் சார்க் மாநாடு நடைபெறவதாக இருந்தால் அதனை இந்தியா குழப்புவதற்கு முயற்சி செய்யுமென்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.
கொழும்பில் மீண்டும் ஒரு சார்க் மாநாடு நடைபெறுவதை புதுடில்லி ராஜதந்திர வட்டாரங்கள் விரும்பவில்லை.
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 26 இதழ்: 272
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 12-11-1991

## மாநாட்டை நடத்த அப்துல்கையூம் முயற்சி

(மாலே)
சார்க் மாநாட்டை விரைவில் கொழும்பில் நடாத்துவதற்கான முயற்சிகளில் மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூம் தீவிரமாக ஈடுபட்டுவருகிறார்.
இதை தொடர்பாக மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா ஜமீர் இந்தியா
(4-ம் பக்கம் பார்க்க)

## மாலைதீவு செல்வதற்கு விசா தேவையில்லை

(மாலே)
இலங்கையிலிருந்து மாலைதீவு செல்பவர்கள் விசா பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை மாலைதீவு அரசு நீக்கியுள்ளது.
கடந்த வாரம் மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூம் 'சார்க்' உச்சி மாநாடு சம்பந்தமாக இலங்கை வந்தபோது இலங்கை ஜனாதிபதியுடன்
(4ம் பக்கம் பார்க்க

# சூழ்நிலை சரியாக அமைந்தால்

# புலிகளுடன் பேச்சு நிகழ்த்த

# தொண்டமான் யாழ். வரத்தயார்

(கொழும்பு)
சூழ்நிலை சரியாக அமைந்தால், விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு யாழ்ப்பாணம் வருவேன் என்று கிராமியத் தொழில் துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் தனக்கும் இடையே ஏற்பட்டுள்ள கடிதத் தொடர்பு பற்றிக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுதல் தாம் எடுத்து வரும் மத்தியஸ்த முயற்சியில் உண்மையான முன்னேற்றம் ஏற்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## பிரேமாவுடன் பேசுவார்

(கொழும்பு)
சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்த வருமாறு தான் விடுத்த அழைப்புக்கு விடுதலைப் புலிகள் அளித்த பதிலில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் குறித்து சில தினங்களில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுடன் தாம் பேச விருப்பதாக அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரி
[4-ம் பக்கம் பார்க்க]

## மணலாறு பகுதியில் மீண்டும் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
மணலாறு மாவட்டத்தில் உள்ள கொக்குத்தொடுவாய் மற்றும் நாயாறு பகுதியில் நேற்று கடும் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டது.
நேற்றுக்காலை ஏழுமணியளவில் மூன்று பொம்மர் விமானங்கள், ஒரு ஹெலிகொப்டர்
(4-ம் பக்கம் பார்க்க)

# 1500 கோடி ரூபா பாதுகாப்பு செலவுக்கு ஒதுக்கீடு!

(கொழும்பு)
நாடாளுமன்றத்தில் இன்று மூன்றாவது வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
1992ம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவு, சுமார் 1500 கோடி ரூபாவாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.
கடந்த ஆண்டை விட இது 400 கோடி ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.
[4-ம் பக்கம் பார்க்க]

# "எந்தவொரு வெளிநாட்டு சக்திகளுக்கும் அடிபணியப் போவதில்லை"

## ஜனாதிபதி சூளுரை

(கொழும்பு)
எந்தவொரு வெளிநாட்டு சக்திக்கும் தாம் அடி பணிந்து நடக்கப்போவதில்லை என ஜனாதிபதி திரு பிரேமதாசா கூறியுள்ளார்.
ஹோமாகமவில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்த ஜனாதிபதி அங்கு மேலும் பேசுகையில்;
வெளிநாட்டு சக்திகளுக்கு மட்டுமன்றி, உள்நாட்டுசக்திக
(4-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு ஏற்பாடுகள் மறுசீரமைப்பு

(கொழும்பு)
கொழும்புநகரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.
கொழும்பு நகரிலும் அதனை அண்டியுள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல்களை பரிமாற்றம் செய்யும் தகவல்தொடர்பு வாகனங்கள் நிறுத்தப்படவுள்ளன.
நகருக்கு வருபவர்கள் அடை
[4-ம் பக்கம் பார்க்க]

## க.பொ.த. சாதாரண பரீட்சை டிசம்பர் 9ல் நடைபெறும்

(கொழும்பு)
வடக்கு - கிழக்குமாகாணம் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் 1991-க்கான க. பொ. த. (சாதாரண) பரீட்சை திட்டமிட்டபடி டிசம்பர் 9-ம் திகதி முதல் 18ம் திகதிவரை நடைபெறுமென்றும், இப்பரீட்சையில், 5 லட்சத்துக்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்ற
(4ம் பக்கம் பார்க்க)

# தமிழரின் தேசிய நாளாக மாவீரர் வாரம் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)
தமிழீழ மண்ணைக்காக்க போர்களம் சென்று சமாதிகளான புரட்சி வீரர்களின் தும் தியாகத்தையும், புனிதத்தையும் இதற்காக அனுபவித்த துன்பத்தையும், வேதனைகளையும் நினைவுகூரவும், கௌரவிக்கவும் இந்த நாளை தமிழர்களின் தேசிய நாளாக பிரகடனப்படுத்தியுள்ளோம். இவ்வாறு மாவீரர் நாள்குழு விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்
(4-ம் பக்கம் பார்க்க)

# இந்தியப் பிரதமர் ராவ் தவறான திசையில் செல்கிறார்

## ஜனதாதள் தலைவர் குற்றச்சாட்டு

(பெங்களூர்)
பிரதமர் திரு நரசிம்மராவ் தவறான திசையில் சென்று கொண்டிருக்கிறார் என ஜனதாதள் கட்சித் தலைவர் திரு எஸ் ஆர். பொம்மை குற்றம்சாட்டியுள்ளார்.
'சார்க்' மாநாடு கொழும்பில் நடைபெறாமல் போனதற்கு ராஜிய துறையிலான முறைபாடே காரணமென்றும் அவர் கூறினார்.
எனினும் இந்தராஜிய துறையிலான குறைபாடுகள் என்ன என்பது குறித்து அவர் எதுவும் கூறவில்லை. (ஐ)

## புதுப்பொலிவுடன் உருவாகும் மாவீரர் அலங்காரங்கள்

(யாழ்ப்பாணம்)
மாவீரர் நாள் அலங்காரங்கள், ஒவ்வொரு நாள் காலையும் விடியும் போது புதுப்பொலிவுடன் பரிணமித்து வருவதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.
சோண்டாவில் சந்தியில் உணவு உற்பத்தியின் அவசியத்தை வலியுறுத்தி, நெற்கதிரை ஏந்தும் படமும், எமது
(4ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

லவுண் பீடி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். லுஸ்பா கம்பனி, 293, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(எ-1701)

### மீண்டும் திறக்கப்படும்

யோகானந்தினியின் இலவாலை போலீட்டியில் 13-11-91புதன் கிழமை தொடக்கம் வழமை போல் திறக்கப்படும். டாக்டர் T. துரைராசசிங்கம்.
(சி-5589)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## ஹெலி தாக்குதல்

(ஊர்காவற்றுறை)

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த ஞாயிறு ஹெலியிலிருந்து மக்களைநோக்கி சுடப்பட்டது. அடியிருந்த மக்கள் சிதறி ஓடி பாதுகாப்பு இடங்களுக்கு சென்றதாக கூறப்படுகிறது.

## இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

கடந்தவிலகல் ஆதரவில் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட போட்டியில் இரு ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

முதல் போட்டியில் பாஷையூர் சென். ரூக் கழகத்தை எதிர்த்து லைக்கிஸ் கழகம் மோதும் 2-வது ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழகம் மோதும்.
(வி)

## பொதுக் கூட்டம்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பாவனையாளர் பாதுகாப்பு ஆலோசனைக்குழுக்களுக்கான பொதுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட 25 கிராமசேவை அலுவலர் பிரிவுகளின் பாவனையாளர் பாதுகாப்பு ஆலோசனைக்குழுக்களின் உறுப்பினர்களுக்கான விசேட பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் சித்தன்கேணி கணேசவித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
(137)

## இந்து இளைஞர் மன்ற கட்டடத்தில் பாடசாலை

(மானிப்பாய்) ஆனைக்கோட்டை வரசுப்பிரமணிய வித்தியாசாலை ஆனைக்கோட்டை இந்து இளைஞர் மன்றக் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்குகின்றது.

இப்பாடசாலையில் கொட்டடி நாவாந்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 82 குடும்பங்கள் அகதிகளாக தங்கி இருப்பதனால் கடந்த சில வாரங்களாக இப்பாடசாலை இயங்காமல் இருந்தது. தற்பொழுது அப்பாடசாலை நிர்வாகம் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பயனாக பாடசாலையின் அருகாமையிலுள்ள இந்த இளைஞர் மன்ற கட்டிடத்தில் கடந்த 4ந் திகதி திங்கள் முதல் மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது.
(71)

## ஆசிரியர் தினவிழா

(உடுவில்)

நவாலி அட்டகிரி சைவத் தமிழ் வித்தியாலய ஆசிரியர் தினவிழாவில் தொலைக்கல்வி நிலைய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். எஸ். அலெக்ஸாண்டர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

திரு. சோ. சுந்தரராஜன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவினை சென். ஆன்ஸ் பாடசாலை அதிபர் திருமதி றெஜினா இருதயநாதன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

நவாலி கொத்தணி அதிபர் திரு. ஐ. மனோகரன் அட்டகிரி சைவத்தமிழ் வித்தியாலய அதிபர் இ. வல்லிபுரத்துக்கு வெற்றோர் சார்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட அதிபர்கள் திருவாளர்கள் க. கணேசலிங்கம், சி. சுந்திரன் மற்றும் எஸ். கிருஷ்ணமூர்த்தி, செல்வி. நவரத்தினம், செல்வி வ. ஜெயதேவி உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினர். செல்வி. சுபாஜினி பாராட்டுப்பத்திரம் வாசித்தார்.
(109)


## போத்தல்கள் தேவை

பின்வரும் விலைகளில் எம்மால் கொள்வனவு செய்யப்படும்.

| | |
|---|---|
| ஜாம் போத்தல்கள் | ரூபா 5-00 |
| ஜாம் போத்தல்கள் (சிறியது) | ரூபா 2-50 |
| விவா, ஹொர்லிக்ஸ் (400 g மூடியுடன்) | ரூபா 5-00 |

**Taste Line Industries (pvt) Ltd**

ரேஸ்ட் லைன் இன்டஸ்றீஸ்

14, சினியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(ஏ-1697)


## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 10-02-1946

உதிர்வு: 13-11-1989

திதி: 12-11-1991



### தம்பிராசா பாக்கியராசா

(அச்சுவேலி ஓமேகா வாச் வேக்ஸ் உரிமையாளர்)


எங்கள் அன்புத் தெய்வமே!
பாசத்தின் பிறப்பிடமே
நீர் எம்மை பிரிந்து ஈராண்டு ஆயினும்
உம் நினைவு எம்மை விட்டு அகலாது.

உம் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
(சி 5586)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னத்தம்பி நல்லையா

(195, சிவலிங்கபுளியடி வீதி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 05-10-1912 மறைவு: 15-11-1988

திதி: 12-11-1991

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும் உங்கள் அன்பு நினைவுகள் என்றும் எம் உள்ளங்களில் இருந்து மாறாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

609, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(ஏ-1706)

## இராசி பலன்

12-11-1991
செவ்வாய்க்கிழமை
(தமிழுக்கு ஐப்பசி 26)

ஷஷ்டி பி. இ. 2-11 வரை. உத்தராடம் முழுவதும். இராகுகாலம் 3-06 முதல் 4-36 வரை. சுபநேரம் காலை 10-36 முதல் 12-06 வரை. சித்தயோகம் கந்தசஷ்டி விரதம்.

மேடம்: வாதிவான மாற்றம். வரவு. தொழில் சிறப்பு.

இடபம்: கடும்மழை, அலைச்சல், ஆலோசனை.

மிதுனம்: தொழில் பிணக்கு சேமிப்பு, மனமுடை.

கடகம்: பெரியோர் ஆசி, தொழில் மேன்மை, வெற்றி.

சிங்கம்: இலைச் சிறப்பு, திருமண யோகம், பாராட்டு.

கன்னி: அடம் பிடித்தல், சாலிதடை, உற்சாகமின்மை

துலாம்: சகோதர உதவி, பயண அலைச்சல், ஆபரம்.

விருச்சிகம்: பசக்குவள்ளை, பிரயாணம், மனநிறைவு

தனுசு: குடும்பக் கஷ்டம். ஏமாற்றம், மனவிரக்தி.

மகரம்: பொதுப்பணி, தான தர்மம், குடும்ப சுகம்

கும்பம்: புத்திரர் துன்பம், வாக்குக் கலகம், உடல் உபாதை.

மீனம்: வேண்டியவை அடைதல், கல்வியால் பெருமை, இனசன மகிழ்ச்சி

ஜோஸ்யர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### மேஜர் ஹென்றி

[ஏகாம்பரம் மன்னீர்ச்செல்வன்]

புங்கையூரில் வீர ஜனனம்: 04-02-1972

மாவிட்டபுரத்தில் வீரமரணம்: 24-10-1990

திதி: 12-11-1991

"எங்கள் இனிய தம்பியே"
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
எங்களுடன் இணைந்தாய்
எங்களில் ஒருவனாய்
நட்பின் பொருளதனை
நயம்படக் காட்டிய நீ
தன்னை எங்ஙனம் தவிக்க
விட்டு எங்கு சென்றாய்
மழையில்லாப் பயிர் போல
வாடுகின்றோம் உன்பிரிவால்
ஆறுதல் கூறி விட்டு
உறங்கி விட்டாய் இல்லை இல்லை
'செல்லா நீ' உதிக்கின்றாய்
நெஞ்சமதில் தமிழீழப் பூமியில்
நீ ஒளிர்கின்றாய்.

உன் பிரிவால் என்றென்றும் துயருறும்:

குடும்பத்தினர்

4-ம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(சி 5584)

கட்சி உட்பூசலை சமாளிக்க

# சிறிமாவோ சீனாவிலிருந்து அவசரமாக நாடு திரும்பினார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் எழுந்துள்ள உட்கட்சி பூசலைத் தொடர்ந்து இக்கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது மூன்று வாரகால சீன விஜயத்தை இடையில் நிறுத்திக்கொண்டு கொழும்பு திரும்பியுள்ளார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நாட்டில் இல்லாத சமயம் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களிடையே கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டு கட்சி பிளவுபடும் நிலை ஏற்பட்டதாகவும் இதனை சமாளிப்பதற்காக கட்சியின் மூத்த உறுப்பினர்களின் வேண்டுகோளையடுத்தே அவர் கொழும்பு திரும்பினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நாடு திரும்பிய திருமதி சிறிமாவோ சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தி அவர்களை சமாளிக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளாராம். (வி)

மாலைதீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாளஅட்டைகளையும்கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

புதுப்பொலிவுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லைகளைப் போராளிகள் கண்ணிமைக்காமல் காத்து நிற்பது போன்ற படமும். தெளிவாக மக்களின் மனங்களில் பதியக்கூடிய விதத்தில் நிமிர்ந்து நிற்கின்றன.

தென்மராட்சியிலும் மாவீரர் வாரக் கொண்டாட்ட ஆரம்ப வேலைகள் மிகச்சுறுசுறுப்பாகவும், உணர்வுபூர்வமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பிரதான வீதியோரங்களில் மரங்கள் மரங்களை நாட்டுவதற்கான ஏற்பாடுகளும் மற்றும் வளைவுகள், பந்தல்களும் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் வீதியில் மாவீரர் துயிலும் இல்லத்தில் தென்மராட்சியில் வீரமரணமடைந்த அனைத்துப் போராளிகளுக்கும் நினைவுத்தூபி அமைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழரின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"எங்கள் உயிர்களை குடித்து, உரிமை பறித்து, உடமைகளை அழித்தால், எஞ்சிய தமிழர் வாழ ஆசைப்பட்டு தனக்கு அடிமையாக இருப்பார்கள் என்று சிங்கள அரசு எண்ணுகிறது. அடக்கு முறைகளையும், அடாவடித்தனத்தையும் கட்டவிழ்த்துவிட்டு கடற் பீரங்கிகளையும் குண்டுவீச்சு விமானங்களையும் காட்டி எமது போராட்டத்தை அழிக்கலாம் என்று எண்ணியது. அதனை சீலனாக, செல்லக்கிளியாக, விக்டராக, குமாராக, தவபாலனாக இன்னும் ஆயிரம் ஆயிரம் வேங்கைகளாகவும் புலிகளாகவும் கடற்புலிகளாகவும் பெண்புலிகளாகவும் வரலாற்றில் மறக்கமுடியாத பாடத்தைப் புகட்டினீர்கள்.

உங்களின் உணர்வுகள், வேதனைகள் மறக்கக்கூடியவை அல்ல. தோளில் துப்பாக்கி ஏந்தியபடி, அடிப்போடு விடுதலைத் தாயைக் காப்பாற்ற உழைத்த நாட்கள் கழிந்திருப்பீர்கள்.

சிறு துன்பங்களைக் கண்டு, கலங்கிய எம் சமூகத்திற்கு இத்தனை துன்பங்களைத் தாங்கி வீரத்துடனும், உறுதியுடனும், சகிப்புத்தன்மையுடனும் வாழ முடியுமென்பதை வரலாற்று பாடமாக வாழ்ந்து காட்டினீர்கள்.

உங்கள் வரலாற்றுத் தியாகங்கள் வீண் போகாது. நீங்கள் விதைத்துச் சென்ற வீரம் உறுதி, நம்பிக்கை எனும் பயிர்கள் பெரும் விருட்சமாக வேரூன்றி நிலைத்து நிற்கும்.

## இணக்கமன்றுவிசாரணைகள் மாவீரர்நாளில் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

'மாவீரர் தினத்தை' முன்னிட்டு எதிர்வரும் 21ம் திகதியில் இருந்து 27ம் திகதி வரை சகல ஆரம்ப நீதிமன்ற/மேன்முறையீட்டு இணக்கமன்று/இணக்கமன்று விசாரணைகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

சகல ஆரம்ப நீதிமன்ற/மேன்முறையீட்டு இணக்கமன்ற/இணக்க மன்று உறுப்பினர்களும், பொறுப்பாளர்களும், உத்தியோகத்தர்களும் குறித்த மாவீரர் தினத்தில் அப்பகுதி அரசியல் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு, மாவீரர் தினத்திற்குரிய ஒழுங்குகளைச் செய்வதற்கு ஒத்துழைக்குமாறு தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது. (வி)

## முப்படை தலைமைச் செயலக குண்டுவெடிப்பு தொடர்பாக இரு தமிழ்ப்பெண்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு முப்படை தலைமைச் செயலகத்தில் குண்டு வெடிப்பு சம்பந்தமாக இரு தமிழ்ப் பெண்களை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கொழும்பில் கைது செய்துள்ளனர்.

பம்பலப்பிட்டியில் வசித்து வரும் மட்டுநகரைச் சேர்ந்த மேற்படி இரு தமிழ்ப் பெண்களும் தற்போது ஒரு அமைச்சின் செயலகத்தில் சேவை செய்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

## கந்தசஷ்டி பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி சைவ சித்தாந்த சபை நடத்தும் கந்தசஷ்டி பூர்த்தி விழா, சபையின் தலைவர் திரு க. கோபாலகிருஷ்ணன் தலைமையில் இன்று மாலை கைதடி இனிக்கித் தோட்டம் கந்தசுவாமி கோவிலில் நடைபெறவுள்ளது.

இந்து மதத் தத்துவம், சூரசம்காரம், முருகன் ஆகிய தலைப்புகளில், சபைப் பேச்சாளர்களின் சொற்பொழிவுகள் சிறப்பு நிகழ்ச்சியாக மேற்படி விழாவில் நடைபெறவுள்ளது.

## பேராதனை பல்கலைக்கழகம் வடக்கில் பரீட்சை நடத்த மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வெளிவாரிப் பட்டதாரிகள் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு, பேராதனைப் பல்கலைக் கழகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

பேராதனையில் வருடாந்தம் நடாத்தப்படும் மேற்படி பரீட்சையை போக்குவரத்து சிரமங்கள் காரணமாக இம்முறை யாழ் நகரில் நடாத்தும்படி யாழ். அரச அதிபர் விடுத்த வேண்டுகோளை, பேராதனைப் பல்கலைக் கழக தலைமைப் பீடம் மறுத்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (வி)

## அதிபர் ஆசிரியருக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த, கோட்டத்தை அதிபர் அதிபர்கள், ஆசிரியர்களுடனான சந்திப்பு, பலாலி மகாவித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 10-00 மணிக்கு நடைபெறவுள்ளது. இச்சந்திப்பில் தமிழீழ நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி யாழ் மாவட்ட மக்களுறவு பொன்னை முன்னெடுப்புப் பொறுப்பாளர் இளம்பரிதி (ஆஞ்சி) ஆகியோர் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார்கள்.

## பேச்சு போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆறும் ஆண்டும் அதற்கு உட்பட்ட மாணவர்களுக்கு மான கோட்ட மட்டத்தில் நடந்து முடிந்த பேச்சுப் போட்டியில் தெரிவு செய்த சகல பிரிவுகளுக்குமான இறுதி மாவட்ட ரீதியான போட்டி யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நாளைக்காலை 10 மணியளவில் நடைபெறும்.

## விமானக் குண்டுவீச்சில் 'பெய்ருட்தளம்' சேதம்

(கொழும்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் 'பெய்ருட் தளம்' எனப்படும் முக்கிய தளம், விமானப் படையின் குண்டு வீச்சினால் சேதமாக்கப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இத்தாக்குதலில் பல குண்டு வீச்சு விமானங்கள் ஈடுபட்டதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

தொப்பிகல காட்டுப் பகுதியில் இம்முகாம் அமைந்திருந்ததாகவும், கடந்த வாரம் இப்பகுதியில் விமானத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## மகாராஷ்டிர மாநிலத்தில் கண்ணிவெடி தாக்குதலில் 9 பொலிஸார் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் சம்பவம் ஒன்றில் இரு பொலிஸ் அதிகாரிகள் உட்பட 9 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

காவல் நிலையம் ஒன்றை நோக்கி பொலிஸார் ஜீப் ஒன்றில் சென்று கொண்டிருக்கையிலேயே இந்த சக்தி மிக்க கண்ணிவெடி தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

உள்ளூர் 'நக்ஸலைட்'களே இத்தாக்குதலுக்கு பொறுப்பென பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வி)

பிரேமாவுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

விடுதலைப் புலிகளிடம் இருந்து தனக்குக் கிடைத்த கடிதத்தை தான் நன்கு ஆராய்ந்தபின்பு ஜனாதிபதியுடன்பேசவுள்ளதாகவும் திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மாநாட்டை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கடந்த வாரம் மாலைதீவு ஜனாதிபதி இலங்கையிலிருந்த போது பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாட்டின் தலைவர்களைச் சந்தித்து உரையாடியது குறிப்பிடத்தக்கது.

சார்க் மாநாட்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வாரம் கொழும்பில் நடைபெறவிருந்த சார்க் மாநாடு ரத்துச் செய்யப்பட்டதற்கு இந்தியாவே காரணமென இலங்கைத் தரப்பில் வைத்த குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டதைத் தொடர்ந்தே புதுடில்லி வட்டாரங்கள் கடும் சினம் அடைந்துள்ளன. இதையடுத்தே கொழும்பில் நடைபெறவிருக்கும் மாநாட்டை மீண்டும் குழப்ப இந்திய தரப்பு முயல்வதாகவும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன. (வா)

மணலாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியன தாக்குதலில் ஈடுபட்டன.

இதேவேளை நேற்றுக்காலை 7-15 மணியளவில் மணலாறு இராணுவ முகாமிலிருந்து உக்கிரமான ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

1500 கோடி ரூபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய வரவு-செலவுத் திட்டத்தில் 6950 கோடி ரூபா துண்டு விழுந்துள்ளது.

துண்டு விழும் தொகையை ஈடுசெய்வதற்கான ஆலோசனைகள், நிதியமைச்சர் டி.பி. விஜயதுங்காவினால் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. (மா)

## நெல்லியடியில் பாண் விலை ரூ. 7·00

(புலோலி)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 7 ரூபாவாக பாண் விற்பனை செய்துவருகிறது.

இச்சங்க பேக்கரியால் தயாரிக்கப்பட்டு 7 ரூபாவாக விற்பனை செய்யப்படும் பாணின் நிறை 350 கிராம் ஆகும். (71)

## பென்சன் வவுச்சர்

(மானிப்பாய்)

அக்டோபர் மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்கள் யாழ். செயலகத்திலிருந்து உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஓய்வூதியப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (71)

க. பொ. த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாகவும் பரீட்சை ஆணையாளர் திரு. ஆசர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இம்முறை இப்பரீட்சை நடைபெறுவதற்கு சகல தரப்பினரும் ஆதரவு தெரிவித்திருப்பதாகவும் இதேவேளை இப்பரீட்சையில் இம்முறை ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது தபால் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டு, ஆகியவற்றில் ஒன்றை பரீட்சார்த்திகள் தம்முடன் கொண்டு செல்ல வேண்டும்.

இவற்றை தவிர்ந்த வேறு எந்த ஒரு அத்தாட்சிப்படுத்தப்பட்ட அடையாள அட்டைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதென்றும் கடந்த வருடம் நடைபெற்ற இப்பரீட்சையில் இதுபோன்ற போலி அடையாள அட்டை

கனிஷ்ட 859 பேர் ஆள்மாறாட்டம் செய்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், திரு ஆசர் வெதமுல்ல மேலும் தெரிவித்துள்ளார். (வி)

எந்தவொரு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கும், இந்நாட்டு இறைமைக்கு குந்தகம் விளைவிக்க அனுமதிக்கப் போவதில்லை.

பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்த்துப் போராட்ட கோடிக்கணக்கான ரூபா பணம் செலவிடப்படுகிறது. இருந்த போதிலும் அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கைகளால் நாடு துரிதமாக அபிவிருத்தியடைந்து வருகிறது. உதவி வழங்கும் நாடுகளும், வெளிநாட்டு நிறுவனங்களும் அரசுக்கும் உதவி வழங்கி வருகின்றன.

பிரதமர் சமர்ப்பிக்கவிருக்கும் புதிய வரவுசெலவுத் திட்டம் அரசின் பலத்தை எடுத்துக்காட்டுமென்றும் கூறினார். (ஐ)

## வடமாகாண பல்கலைக் கல்லூரி 20-ம் திகதி முதல் இயங்கும்

(வவுனியா)

வடமாகாண பல்கலைக்கழக கல்லூரி இம்மாதம் 20ம்திகதி முதல் இயங்கவுள்ளது.

வடமாகாண பல்கலைக்கழக கல்லூரி வவுனியா மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 20 ம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

இக் கல்லூரியில் ஜி. சி. ஈ. உயர்தரப்பரீட்சையில் மூன்று பாடங்களில் விசேட சித்தி பெற்ற 100 மாணவர்கள் கல்லூரியில் கல்வி கற்க தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registred as a News Paper at the General Post Office Sri Lanka under licence Number B/10836/91.